தினத்தந்தி

சென்னை 28-7-2020

## ஸ்ரீராமச்சந்திரா உயர்கல்வி நிறுவனம் சார்பில்

# 'பாடத்திட்டம் செறிவூட்டல்' குறித்த ஆன்லைன் கருத்தரங்கம்

## 31-ந்தேதி நடக்கிறது

சென்னை, ஜூலை.28-ஸ்ரீராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் 'பாடத்திட்டம் செறிவூட்டல்' என்ற தலைப்பில் ஆன்லைன் கருத்தரங்கத்தை நடத்த முடிவு செய்து இருக்கிறது. இந்த கருத்தரங்கம் வருகிற 31-ந்தேதி (வெள்ளிக்கிழமை) காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை நடைபெற உள்ளது.

இதில் பல்கலைக்கழக மானியக்குழுவின் (யு.ஜி.சி.) துணைத் தலைவர் பூஷன் பட்வர்தன், கல்வி நிறுவனங்களுக்கான தேசிய தரவரிசை அமைப்பின் (என்.ஐ.ஆர்.எப்.) உறுப்பினர் செயலர் சுனில்குமார், தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகார கவுன்சில் (என்.ஏ.ஏ.சி.) ஆலோசகர் கே.ரமா, ஸ்ரீராமச்சந்திரா பல்கலைக்கழக துணைவேந்தர் பி.வி.விஜயராகவன் மற்றும் ஆய்வுத்துறை தலைவர் எஸ்.பி.தியாகராஜன் உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர்.

கருத்தரங்கில் மாணவர்கள், ஆசிரியர்கள் பங்குபெற https://bit.lyJV27 என்ற இணையதளம் மூலம் பதிவு செய்யலாம். SRIHER என்ற முகநூல் மற்றும் யூ-டியூப் மூலமும் இணையலாம்.